# மலை கோவிலில் தவறி விழுந்து இறந்த டிரைவரின் உடல் மீட்பு

திருச்சி, அக். 16–

திருச்சி, முசிறியைச் சேர்ந்தவர் ஆட்டோ டிரைவர் ஆறுமுகம், 38; திருமணமாகி, எட்டு ஆண்டுகளாகியும் குழந்தை இல்லை. புரட்டாசி கடைசி சனியான நேற்று முன்தினம், தா.பேட்டை அருகே உள்ள சஞ்சீவராயன் பெருமாள் கோவில் சென்று, குழந்தை வரம் வேண்டி, கிரிவலம் சென்றார்.

கிரிவலம் செய்யும் பகுதி, மிகவும் செங்குத்தான மலையில், ஆபத்தான நிலையில் இருப்பதால், கிரிவலம் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை, கோவிலுக்கு சென்ற ஆறுமுகம், இரண்டு முறை ஆபத்தான கோவில் விளிம்பை பிடித்தபடி, கிரிவலம் வந்துள்ளார். மூன்றாவது முறை, வலம் வந்த போது, 3,500 அடி உயர மலையில் இருந்து இடறி கீழே விழுந்தார்.

இதை பார்த்து அதிர்ச்சியடைந்த பக்தர்கள், போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். போலீசாரின் எல்லை பிரச்னை காரணமாக, சம்பவ இடத்துக்கு செல்வதிலும், தவறி விழுந்தவரை மீட்பதிலும் சுணக்கம் ஏற்பட்டது.

ஆறுமுகத்தின் உறவினர்கள் புகாரை அடுத்து, நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி போலீசார், தீயணைப்பு படையினரின் உதவியுடன், தேடும் பணியில் ஈடுபட்டனர்.

சேட்டிலைட் மூலம், படம் பிடித்து பார்த்த போது, ஆறுமுகம் தவறி விழுந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு, நேற்று மதியம், 12:00 மணிக்கு, அவரது உடல் மீட்கப்பட்டது. உடலை பார்த்து, உறவினர்கள் கதறி அழுதனர்.


## M/s.சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டின் ரெசொலூஷன் பிளானிற்கான விருப்ப அறிவிக்கை கோரி அறிவிப்பு

**(CIN : L21012TN2005PLC092783)**

**M/s.**சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட், காகித தயாரிப்பை முதன்மை தொழிலாக கொண்டுள்ளது. இதன் பதிவு அலுவலகம் மற்றும் அதன் உற்பத்தி பிரிவு கோடகநல்லூர் கிராமம், வடுக்கன்பட்டி அஞ்சல், ஐ.சி.பேட்டை, திருநெல்வேலி – 627010, தமிழ்நாட்டில் அமைந்துள்ளது. வருடத்திற்கு 90000 மெட்ரிக் டன் தயாரிப்பு திறனை கொண்ட இந்தியாவில் உள்ள காகித ஆலை இது.

M/s.சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்டிற்கு எதிரான திவால் தீர்மான நடைமுறைகளை 21.06.2017 அன்று முதல் துவங்குவதற்கு தேசிய நிறுவன சட்ட தீர்ப்பாயம் ஆணையிட்டுள்ளது.

எனவே, இந்த அறிவிப்பில் விருப்பமுள்ள நபர்கள் (ரெசொலூஷன் அப்ளிகென்ட்) தங்களது விருப்பத்திற்கான படிவங்களை இரண்டு கீழ்குறிப்பிட்டுள்ள தலைப்புடன் 07.11.2017 மாலை 06.00 மணிக்குள்ளோ அல்லது அதற்கு முன்போ அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

1. Technical Bid - M/s.சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்
2. Financial Bid - M/s. சர்வலட்சுமி பேப்பர் லிவீடெட்

ரெசொலூஷன் அப்ளிகென்டின் குறைந்தபட்ச நிகர மதிப்பு (Networth) .03.2017 அன்று ரூ.100 கோடியாக இருக்க வேண்டும்.

ன் கொடுத்தவர்கள் குழுவின் தனிப்பட்ட சுதந்திரத்தில், தி இன்சால்வன்சி மற்றும் பேங்க்ரப்சி கோடு, 2016, பிரிவு 29(2)–ன் படி, உறுதிமொழி பெற்றபின், மேற்குறிப்பிட்டுள்ள கம்பெனியின் தகவல் அறிவிக்கை ரெசொலூஷன் அப்ளிகென்டுக்கு அளிக்கப்படும். விண்ணப்பதாரரின் விருப்பப்படிவங்களை எந்த காரணமும் குறிப்பிடாமல், கடன் கொடுத்தவர்கள் குழுவிற்கு நிராகரிக்கும் உரிமை உண்டு.

இவ்வறிவிப்பு குறித்து ஏதேனும் விவரங்கள் தேவைப்பட்டால், csdhanapal.ibc@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் 07.11.2017க்கு முன்பு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒப்பம்/–
(S.தனபால்)
ரெசொலூஷன் புரொபஷனல்
For M/s.சர்வலட்சுமி பேப்பர் லிமிடெட்
பதிவு எண் :IBBI/IPA-002/IP-N00060/2017- 18/10112
அறை எண் 103, முதல் தளம், காவேரி காம்ப்ளக்ஸ்,
96/104, நுங்கம்பாக்கம் ஹைரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொடர்புக்கு : 044-4553 0256 / 0257


# 5 குழந்தைகளை தவிக்க வி

புதுச்சேரி, அக். 16–

பெற்றோர் விஷம் குடித்து தற்கொலை செய்ததால், அவர்களின் ஐந்து குழந்தைகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டம், சிதம்பரத்தை சேர்ந்தவர் ராஜபெருமாள், 35; சென்னையில் கார் டிரைவராக வேலை பார்த்தார். இவரது மனைவி அம்பிகா, 33; இவர்களுக்கு இரண்டு மகன்கள், மூன்று மகள்கள் உள்ளனர்.

மனைவி அம்பிகா தனிக்குடித்தனம் விரும்பியதால், குடும்பத்தை, புதுச்சேரியில் குடிவைத்த, ராஜபெருமாள், வருமான பற்றாக்குறையால் கஷ்டப்பட்டுள்ளார்.


இரு நாட்களுக்கு முன் புதுச்சேரி வந்த ராஜபெருமாள், மனைவி மற்றும் 15 வயது மூத்தமகளுடன், வீட்டில் இருந்து சென்று உள்ளார்.

**மயங்கி விழுந்தனர்**

மனைவி, மகளுடன் திருப்பூர் சென்ற ராஜபெருமாள், பஸ் நிலையத்தில் இறங்கியுள்ளார். அங்கு,

# தீபாவளியை முன்னிட்டு 680 பஸ்கள் விடுவிப்பு

**– நமது நிருபர் –**



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, 'ஜப்தி' செய்யப்பட்ட, 680 பஸ்களை மீட்டுக் கொள்ள, சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கி உள்ளது.

தமிழ்நாடு போக்குவரத்து கழக பணியாளர் சம்மேளன பொதுச் செயலர் பத்மநாபன் கூறிய தாவது:

விபத்து இழப்பீடு கோரியவர்களுக்கு, இழப்பீடு கொடுக்க முடியாததால், மாநிலம் முழுவதும், 680 பஸ்கள், நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்டன. இந்நிலையில், மாயாண்டி சேர்வை என்பவர், பண பலன்கள் கோரி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அந்த விசாரணையில், அரசு தரப்பில், தற்போது ஊழியர்களுக்கு போனஸ் வழங்க வேண்டியுள்ளது. தீபாவளிக்கு சிறப்பு பஸ்கள் இயக்க வேண்டியுள்ளது. எனவே, பணபலன்களை கொடுக்க இயலவில்லை என, தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பயணியர் நலன் கருதி, இழப்பீட்டுத் தொகை, 200 கோடி ரூபாய் செலுத்தி, 680 பஸ்களை மீட்டுக் கொள்ள, உயர் நீதிமன்றம் அனுமதி வழங்கியது. இதன்படி, 14ம் தேதி முதல், நீதிமன்றங்களில் பணம் செலுத்தி, பஸ்கள் மீட்கப்பட்டு வருகின்றன.

சிறப்பு பஸ்கள் இயக்க வேண்டியிருப்பதால், மின்னல் வேகத்தில் பழுது நீக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, பஸ்கள் இயக்கத்திற்கு விடப்படுகின்றன. இனி வரும் காலங்களில், பஸ்களில் விபத்து காப்பீட்டு திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதில், 20 ரூபாய் டிக்கெட்டுக்கு, ஒரு ரூபாய், ஒவ்வொரு, 50 ரூபாய்க்கு, இரண்டு ரூபாய் என, பயணியரிடம் வசூல் செய்தால், காப்பீடு நிறுவனங்கள் மூலம், விபத்து இழப்பீடு பெற முடியும். இத்திட்டம், ஆந்திரா, கேரளா, கர்நாடக மாநிலங்களில் நடைமுறையில் உள்ளது.